*8*

# கிறிஸ்து வருகின்றார்!

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #1*

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக். 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியா யிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*

### *அறிமுகம் (லூக். 1:1-4)*

*லூக்காவின் சுவிசேஷ விவரத்திற்கான அவரது அறிமுகத்தில், அவர் "... நானும் உமக்கு உபதேசிக்கப்பட்டவைகளின் விசேஷங்களின் [கிறிஸ்துவின் வாழ்வின்] நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" (வ. 3, 4) என்று எழுதினார்.[2] இயேசுவைப் பற்றிய "மிகச் சரியான சத்தியத்தை" நீங்கள் அறிய உதவுதல் என்பதே நமது தற்போதைய படிப்பின் அடிப்படை நோக்கமாக உள்ளது. நமது முதல் பாடமானது அவரது பிறப்பை எதிர்பார்த்திருந்த சுவிசேஷ விவரங்களில் அறிமுகக் கருத்துக்களாக உள்ளது. "கிறிஸ்து வருகின்றார்!" என்பதே இந்தப் பாடத்தின் முற்றான ஆய்வுப் பொருளாக இருக்கிறது.*

### *முன்பே இருந்தது வலியுறுத்தப்பட்டது (யோவான் 1:1-18)[3]*

*கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றி நாம் நினைக்கும்போது, பொதுவாக*

பெத்லகேமில் அவரது பிறப்பை கொண்டே நாம் தொடங்குகின்றோம். அந்த நிகழ்ச்சிக்கு நீண்ட காலம் முன்பாகவே இயேசு இருந்தார் என்பதைத் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று யோவான் விரும்பினார். அவர் [இயேசு] உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே கூட இருந்தார் - ஏனென்றால் அவர் உண்மையில் தேவனாகவே இருக்கிறார்:

> ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தி லிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று;[4] உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா. 1:1-3).

இயேசு, "தேவத்துவம்" ("Godhead") என்று KJV அழைக்கின்ற மூன்று தெய்வீக நபர்த்துவத்தில் ஒருவராக இருக்கின்றார் (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9). இம்மூவரும் மத்தேயு 28:19ல் பட்டியலிடப்பட்டுள்ளார்கள்: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். இயேசு தேவனாக இருக்கின்றார் என்ற கருத்து புரிந்து ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஒரு சுலபமான கருத்தாக இருப்பதில்லை. "தேவன்" என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தும்போது, நாம் பொதுவாக பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுகின்றோம். இந்தக் கணத்திற்கு, இயேசு குமாரனாகிய தேவனாக இருக்கின்றார் என்ற கருத்தை உங்கள் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். நமது இந்த பாடங்கள் தொடருகையில் இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்து இன்னும் அதிகமானவை கூறப்படும்.

மீண்டும், நாம் இயேசுவைப் பற்றி நினைக்கும்போது, அவர் எப்போதுமே "இயேசு" என்ற பெயர் கொண்டவராயிருந்தார் என்றோ அல்லது "கிறிஸ்து" என்று குறிப்பிடப்பட்டார் என்றோ நாம் வழக்கமாக நினைக்கின்றோம். ஆயினும், மரியாள் ஒரு குழந்தையைக் கர்ப்பந்தரித்திருந்த விஷயம் பற்றித் தூதன் யோசேப்புக்குக் கூறியபோது, "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (மத். 1:21) என்று கூறினார். "கிறிஸ்து" (''அபிஷேகம் பண்ணப்பட்டவர்'') என்ற இயற்பெயரை/குறிப்புப் பெயரைப் பற்றி, இயேசு தமது ஞானஸ்நானத்தின்போது (மத். 3:13-17), ஆவியானவரைக் கொண்டு தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (லூக். 4:18; அப். 10:38). இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு முன்பு அவரது பெயர் என்னவாக இருந்தது?[5]

இயேசு தமது பூமிக்குரிய இருப்பிற்கு முன்பு, வார்த்தையாக [*logos*[6]] இருந்தார் என்று யோவான் கூறினார். கிறிஸ்து, தேவனுடைய வார்த்தையின் நபர்த்துவமாக இந்த பூமிக்கு வந்தார். யோவான் 1:18ல் அவர் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று எழுதினார். இயேசு தமது போதனை மற்றும் நபர்த்துவம் ஆகியவற்றினால், தேவனை "விளக்கப்படுத்தினார்." அவர் பிலிப்புவிடம், "... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் ..." என்று கூறினார் (யோவா. 14:9).

வசனம் 14தான் யோவானின் அறிமுகத்தில் சிந்தையை மிகவும்

*தூண்டக் கூடியதாக உள்ளது: "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" இதை நாம் "திரு அவதாரம்" "the Incarnation" (இது "மாம்சமாக்குதல்"[7] என்று அர்த்தப்படுகிற ஒரு லத்தீன் சொற்றொடரில் இருந்து வந்ததாக உள்ளது). பிலிப்பியர் 2:5-8 வசனப்பகுதியானது, திரு அவதாரம் பற்றிய வேதாகமத்தின் மிகச் சிறந்த எடுத்துரைப்பாக உள்ளது. திரு அவதாரத்தின் எல்லா இரகசியங்களையும் நாம் ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாது, ஆனால் "வார்த்தையானவர் மாம்சமானார்" என்ற மாபெரும் சத்தியத்தை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளுகின்றோம். எபிரேயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு எழுதினார்:*

> *... அவர் ... இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2:17, 18).*

*யோவான் தமது அறிமுகத்தில் இன்னும் அதிகமாகக் கூறியிருக்கிறார். (1) இயேசு ஒளியாக இருக்கின்றார் (ஒளியூட்டப்படுதலின் ஆதாரமூலம்) (வ. 4, 5, 9; வ. 16-18ஐயும் காணவும்).[8] (2) இயேசுவின் முன்னோடினவர் ஒளிக்குச் சாட்சி அளித்தார் (வ. 6-8, 15). (3) இருளில் இருந்த உலகம் ஒளியைப் புறக்கணித்தது (வ. 5, 10, 11). (4) ஒரு சிலர் - விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய பிறப்பு[9] ஆகியவற்றின் மூலமாக - ஒளியை ஏற்றுக் கொண்டார்கள் (வ. 12, 13). ஆயினும் இந்தக் கணத்தில் கிறிஸ்துவின், முன்பே இருந்த நிலையின் மீதே நமது கவனம் உள்ளது.*

## *தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டன (மத். 1:1-17; லூக். 3:23-38)*

***மத்தேயு தந்த வம்ச வரலாறு (மத். 1:1-17)***

*மத்தேயு சுவிசேஷப் புத்தகமானது, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் போல் மரபு ரீதியான முகவுரையைக் கொண்டிருப்பதில்லை. மாறாக, யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா இயேசுவே என்று மத்தேயு உடனடியாக வலியுறுத்தினார். அவர், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (வ. 1) என்று தொடங்கினார். கென் கையர் அவர்கள் "மத்தேயு தமது சுவிசேஷத்திற்கு, முகப்புக்கு எதிர்ப்பக்கச் சித்தரிப்பு என்ற வகையில் ஒரு குடும்ப மரத்தை வைக்கின்றார். அந்த மரமானது இஸ்ரவேலின் மாபெரும் முற்பிதாவான ஆபிரகாம் மற்றும் அதன் மாபெரும் ராஜாவான தாவீது ஆகியோருக்குள் வேர் கொண்டுள்ளது'' என்று கூறினார்.[10] பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின்படி, மேசியா என்பவர் ஆபிரகாமின் சந்ததியாகவும் (ஆதி. 22:18; கலா. 3:16ஐக் காணவும்) மற்றும் தாவீதின்*

*சந்ததியாகவும் (2 சாமு. 7:16; யோவா. 7:42 ஆகியவற்றைக் காணவும்) இருக்க வேண்டியதாயிற்று.*

*இவ்விதமாக, மத்தேயு இந்தக் குடும்ப மரத்தை, ஆபிரகாமில் தொடங்கி (வ. 2), தாவீதை நோக்கி நகர்ந்து (வ. 6, 7). இயேசு வரை தொடர்ந்தார் (வ. 16). அவரது பட்டியல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது - (1) ஆபிரகாம் முதல் தாவீது வரை, (2) தாவீது முதல் [பாபி லோனுக்கு] நாடு கடத்தப்பட்டது வரை, மற்றும் (3) [பாபிலோனுக்கு] நாடு கடத்தப்பட்டது முதல் இயேசு வரைக்கும் - இவை ஒவ்வொன்றும் பதினான்கு பெயர்களுடன் உள்ளன (வ. 17).[11] தாவீதின் பெயரானது, முதல் பிரிவில் உள்ள பதினான்கு பெயர்களிலும் மற்றும் இரண்டாவது பிரிவில் உள்ள பதினான்கு பெயர்களில் ஒன்றாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தாவீதின் பெயரை இவ்வாறு இருமுறை பயன்படுத்துதலானது, தேவனு டைய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு அவரது கணிசமான பங்களிப்பை ஒப்புக்கொள்வதாக இருக்கலாம்.*

*மத்தேயு 1:1-17 வசனப்பகுதியானது, பழைய ஏற்பாட்டில் பெயர்களைக் காண்பதற்கு நீங்கள் நேரம் எடுத்துக் கொள்ளும் வரையிலும், பெயர்களின் ஒரு மந்தமான அட்டவணையாகவே காணப்படலாம்.* F. *லாகார்டு ஸ்மித் அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

> *மத்தேயு தந்த வம்சவழி அட்டவணையானது பல மகிழ்வான வியப்புக்களைக் கொண்டுள்ளது. இயேசுவின் தொடக்க கால வேர்களில், ஆபிரகாம் மற்றும் தாவீது போன்ற குறிப்பிடத்தக்க நீதிமான்கள் மட்டுமின்றி, மனாசே ராஜா உட்பட, வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் அநீதியானவர்களாய் இருந்தவர்கள் பலரும் உள்ளனர். எதிர்பார்க்கப்படுகிறபடி, அங்கு யூதர்கள் இருந்தார்கள், மட்டுமின்றி ஒரு கானானிய மற்றும் ஒரு மோவாபியப் பெண் உட்பட [இவர்களின் தேசங்கள் தேவனுடைய மக்களுக்கு தீவினை விளைவிக் கும் விரோதிகளாய் இருந்தார்கள்] புறஜாதியார்களும் இருந்தார்கள். இந்தக் காலகட்டத்தின் சமூக அந்தஸ்தின் கண்ணோக்கில் காண்கை யில், ஆண்களுடன் பெண்களும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது வியப்பளிப்பதாக உள்ளது. மற்றும், இவர்களில் குறைந்தபட்சம் இரண்டு பெண்கள், தாங்கள் செய்திருந்த பாவங் களைக் கொண்டு நன்கு அறியப்பட்டிருந்தார்கள்.[12]*

*இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் சிலர், மாபெரும் தனிநபர்களாய் இருந்தார்கள், சிலர் அவ்வளவு பெரியவர்களாய் இருந்தது இல்லை, மற்றும் சிலர் (வேதனைமிக்க வகையில் நேர்மையாகக் குறிப்பிடுகையில்) வெறுக்கத்தக்கவர்களாய் இருந்தார்கள். கையர் அவர்கள் கவனித்துள்ளபடி, "இரட்சகரின் [குடும்ப] மரமானது அதன் பங்குக்கு தாவர நோயும், கனி தராத தன்மையும் கொண்டதாக, வளைந்த குச்சிகளும் முறிந்த கிளைகளும் உடையதாக இருந்தது."[13] மனித குலத்தின் பலவீனத்தி லும் (மற்றும் பிடிவாதத்திலும் கூட) தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்பதற்கு நமக்கு எப்போதாவது ஆதாரம் தேவையென்றால், அது*

மத்தேயு தந்த வம்சவழி அட்டவணையில் தாராளமாகத் தரப்படுகிறது!

**லூக்கா தந்த வம்ச வரலாறு (லூக். 3:23-38)**

லூக்காவும் ஒரு வம்ச வழி அட்டவணையைத் தருகின்றார், ஆனால் இது அவரது சுவிசேஷப் புத்தகத்தின் தொடக்கத்தில் காணப்படுவதில்லை. இது அதிகாரம் 3ல் காணப்படுகிறது, மற்றும் இது மத்தேயு தந்த பட்டியலின் நோக்கத்திலிருந்து மாறுபட்டதாக உள்ளது. மத்தேயு தந்த வம்ச வழி அட்டவணை ஆபிரகாமிலிருந்து தொடங்குகிறது (மத். 1:1, 2) மற்றும் அது யூதர்களுடன் [மாத்திரம்] இயேசுவின் உறவுமுறையைக் காண்பிக்கிறது. லூக்கா தந்த வம்ச வரலாற்றின் பூமிக்குரிய பாகமானது ஆதாமில் சென்று முடிகிறது (லூக். 3:38). இது, எல்லா மக்களுடனும் இயேசுவின் உறவைக் காண்பிக்கிறது.

இயேசுவின் வம்ச வழி பற்றி மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தந்த விவரங்கள் குறிப்பிடத்தக்க வகையில் மாறுபாடு கொண்டுள்ளன. இவ்விரண்டுமே, இயேசு ஆபிரகாம் (மத். 1:2; லூக். 3:34) மற்றும் தாவீதின் (மத். 1:6; லூக். 3:31) சந்ததியில் தோன்றினார் என்று காண்பிக்கின்றன, ஆனால் இவ்விரு பட்டியலிலும் உள்ள மற்ற பெயர்களில் பெரும்பாலான வைகள் மாறுபட்டவைகளாக உள்ளன.[14]


இந்த மாறுபாடுகள் பற்றி பல்வேறு ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. மத்தேயு, *யோசேப்பின்*[15] மூலமாக இயேசுவின் *சட்டப்பூர்வமான* வம்ச வழியைத் தருகின்றார், அதே வேளையில் லூக்கா, *மரியாளின்*[16] மூலமாக இயேசுவின் *மாம்சப்பிரகாரமான* வம்ச வழியைத் தருகின்றார் என்பதே மிக எளிமையான - ஒருவேளை மிகச் சிறந்த - கருத்தாக உள்ளது. இந்த முடிவு கிறிஸ்தவ எழுத்துக்களில் பிந்திய காலமாகிய ஈசுபியஸ் (c. கி.பி. 260-340) காலம் வரை காணப்படுகிறது.[17] இந்தக் கண்ணோக்கானது, மத்தேயு சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் பிறப்பை யோசேப்பு பற்றிய கண்ணோக்கக் கருத்திலிருந்தும் (மத். 1:18-25; 2:13-15, 19-23) லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் பிறப்பை மரியாள் பற்றிய கண்ணோக்கக் கருத்திலிருந்தும் (லூக். 1:26-56; 2:1-20 [2:19ஐக் கவனிக்கவும்]) வலியுறுத்தத்துடன் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துகிறது. இது மத்தேயுவின் யூதத்துவ வலியுறுத்தத்தையும் லூக்காவின் கிரேக்கத்துவ வலியுறுத்தத்தையும் ஒன்றிணைக்கவும் செய்கிறது.[18]

லூக்கா தரும் வம்ச வரலாற்றில் மரியாளின் பெயர் குறிப்பிடப்படுவ தில்லை என்பது இந்தக் கண்ணோக்கின் அடிப்படைச் சிரமமாக உள்ளது.[19] ஆயினும் இயேசு உண்மையில் யோசேப்புக்குப் பிறந்த மகன் அல்ல ("அவர் யோசேப்பின் குமாரனென்றும் எண்ணப்பட்டார்") என்று வேத வசனம் மறைமுகமாகக் குறிப்பிடுவதைக் கவனியுங்கள், இது லூக்கா யோசேப்பின் மூலமாக இயேசுவின் வம்ச வழியைத் தரவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இது யோசேப்பின் மூலம் இல்லையென்றால் பின்பு யார் மூலமாகத் தருகிறது? லூக்கா, மரியாளின் மூலமாக இயேசுவின் வம்ச வழியைத் தந்தார் என்பதே எளிய பதிலாக உள்ளது. "யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" என்ற சொற்றொடரானது "ஏலியின்

குமாரன்" என்ற சொற்கள் யோசேப்பை அல்ல ஆனால் இயேசுவைக் குறிப்பதாக இணையாக எண்ணப்படலாம். ஏ.டி. இராபர்ட்ஸன் அவர்கள், "இவ்விதமாக, இயேசு ஏலியின்[20] பேரனாக இருப்பார், இது குமாரன் என்பதற்கு அனுமதிக்கப்பட்ட அர்த்தமாக உள்ளது" என்று எழுதினார்.[21]

இவ்விதமாக, இயேசு தாவீதின் சட்டரீதியான சந்ததி என்று மத்தேயு வலியுறுத்தும் வேளையில், இயேசு தாவீதின் மாம்சப் பிரகாரமான சந்ததியாக இருந்தார் என்று லூக்கா வலியுறுத்தினார். இந்த வம்ச வழியை மத்தேயு தாவீதின் குமாரனான சாலொமோன் ராஜாவின் மூலமாகக் கண்டறிகையில், லூக்கா, தாவீதின் மகனான நாத்தானின் வம்ச வழியின் மூலமாகத் தந்தார் (2 சாமு. 5:14). அடுத்த வரும் வரைபடம் இந்த இரு வம்ச வழிகளையும் விவரிக்கிறது. இந்த இருவம்சவழி பட்டியல்களிலும் உள்ள செருபாபேல் என்ற பெயரானது ஒரே மனிதரைக் குறிக்கக்கூடும்.[22]

சுவிசேஷங்களில் தரப்பட்டுள்ள இரண்டு வம்ச வழிகளிலும் 2 சாமுவேல் 7:16ன் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது என்பதில் ஐயமில்லை.




*தாவீதிலிருந்து இயேசுவின் வம்ச வழி*

## அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் (லூக். 1:5-38)

கிறிஸ்துவின் வருகைக்குச் சற்று முந்திய நிகழ்ச்சிகளின் முழுமையான விவரத்தை லூக்காவின் புத்தகம் கொண்டுள்ளது. லூக்கா தமது அறிமுக உரையைத் தொடர்ந்து, அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் இரு வரலாறுகளை எடுத்துரைத்தார்.

**சகரியாவுக்கு வாக்குத்தத்தம் (வ. 5-25)**

முதலாவது வாக்குத்தத்தம் எருசலேமில் இருந்த தேவாலயத்தில் - சகரியா என்ற பெயருடைய ஒரு ஆசாரியருக்கு அளிக்கப்பட்டது.

*சகரியா எருசலேமுக்குத் தென்மேற்கில் ஒரு மலை நாட்டில் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியான எலிசபெத்தும் ஆரோனின் வம்சத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்.[23] இவ்விருவரும் நீதியும் தேவபக்தியும் உள்ள தனிநபர்களாக இருந்தார்கள். அவர்களின் வாழ்வை ஒரே ஒரு விஷயம் மட்டும் சீரழித்துக் கொண்டிருந்தது: அவர்கள் பிள்ளைகள் பெறாமலேயே முதிர் வயதானவர்களாக இருந்தார்கள் (வ. 7).*

*ஆசாரியர்கள் இருபத்து நான்கு பிரிவுகளாக அல்லது வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள் (1 நாளா. 24:1-19). சகரியா, அபியாவின் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார் (லூக். 1:5; 1 நாளா. 24:10ஐக் காணவும்). இந்த வகுப்பினர் வாராந்திர முறைமையாக தேவாலயத்தில் மாறி மாறி ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் தேவாலயக் கடமைகள் பற்றிச் சீட்டுப் போடப்பட்டது (லூக். 1:9). மகா பரிசுத்த ஸ்தலத்தை மறைத்து நிற்கும் தொங்குதிரைக்கு முன்பாக இருக்கும் பீடத்தில் தூபவர்க்கம் இடுதல் என்பது மிகவும் விரும்பப்படக்கூடிய பணிப் பொறுப்பாக இருந்தது. இது சாதாரண ஆசாரியர் ஒருவர், பரிசுத்தமான இடத்திற்கு மிக நெருக்கமாக வரக் கூடிய ஒன்றாக இருந்தது. இது ஆசாரியர் ஒருவருக்கு அவரது வாழ்க்கையில் ஒருமுறை கிடைக்கும் கனத்துக்குரிய பணிப்பொறுப்பாக இருந்தது.*

*இந்த வரலாறு தொடங்குகையில், சகரியா தேவாலயத்திற்குச் செல்ல வேண்டிய வாரமாயிருந்தது - அவர் தூபங்காட்டும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்தார். அவர் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நடந்து செல்லுகையில், அது என்ன ஒரு விசேஷித்த நாளாயிருந்தது என்று அவர் நினைத்திருக்க வேண்டும். அவர் எதிர்பார்த்ததை விட அது ஒரு அதிக விசேஷித்த நாளாக வும் இருந்தது - ஏனெனில் காபிரியேல்[24] என்னும் பெயர் கொண்ட, கர்த்தருடைய தூதன் ஒருவர் அவருக்குத் தரிசனமானார்.*

*தேவனுடைய செய்தியாளர்[25] அந்த வயது முதிர்ந்த ஆசாரியரிடத்தில் அவரும் அவரது மனைவியும் பிள்ளை ஒன்றைப் பெறுவார்கள் என்று கூறினார் (வ. 13).[26] யோவான் என்று பெயரிடப்பட வேண்டியிருந்த இந்த மகன், "எலியாவின் ஆவியும் பலமும் உடையவராய்" மேசியாவுக்கு முன்னோடுபவராக இருப்பார் (வ. 17[27]). ஆசாரியரோ தூதனுடைய அந்த வார்த்தைகள் நம்புவதற்குக் கடினமானவைகள் என்று கண்டார் (வ. 18, 20). ஒரு அடையாளமாக - மற்றும் அவரது அவிசுவாசத்திற்குத் தண்டனை யாக - சகரியா பேச முடியாதவராக விடப்பட்டார் (வ. 20).*

*சகரியா தமது வார முறைமைப்படியான ஊழியத்தை முடித்தபின்பு, இல்லம் திரும்பினார் (வ. 23). தூதன் முன்னுரைத்தபடியே அவரது மனைவி விரைவிலேயே கர்ப்பவதியானார் (வ. 24). நம் எல்லாரையும் போலவே அந்த ஆசாரியரும் கூட, "தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" (வ. 37) என்று கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது.*

***மரியாளுக்கு வாக்குத்தத்தம் (வ. 26-38)***

*முதலாவது, வாக்குத்தத்தமானது பலஸ்தீனத்தின் மிகவும் பரிசுத்தமான நகரத்தில் அளிக்கப்பட்டது; இரண்டாவது வாக்குத்தத்தமானது மிகவும்*

இழிவாகக் கருதப்பட்ட ஒரு நகரத்தில் அளிக்கப்பட்டது (யோவா. 1:46).

எலிசபெத்து ஏறக்குறைய ஆறு மாத கர்ப்பமாய் இருந்தபோது (வ. 26, 36),[28] கலிலேயாவில் இருந்த நாசரேத் என்ற ஒரு சிறிய, சிறப்பற்ற ஊரில் ஒரு இளம் பெண்ணுக்குக் காபிரியேல் தரிசனமானார்.[29] அந்த இளம் பெண், "யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகை"யாக இருந்தார். "அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்" (வ. 27).

''நியமிக்கப்பட்டிருந்த'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது நம் எல்லாருக்கும் பழக்கமான "திருமண நிச்சயதார்த்தம்" என்பதை விட அதிகம் கட்டுப்படுத்துகிற ஒரு ஏற்பாட்டைக் குறிப்பிட்டது. யூதத் திருமணங்கள் இரு படிநிலைளைக் கொண்டிருந்தன: முதலாவது, ஒரு உறுதிப்படுத்தும் வைபவம் (இது "நியமிக்கப்படுதல்" என்று அழைக்கப் படுகிறது, இதையே நாம் "திருமண நிச்சயதார்த்தம்" என்கின்றோம் [மத். 1:18].) பின்பு, சற்றுக்காலம் சென்ற பின்பு,[30] உண்மையான திருமணம் நடக்கும். முதல் வைபவமானது, திருமண உறவு பூர்த்தியாகாத நிலையிலும், மணமகனையும் மணமகளையும் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தியது. மரியாளும், யோசேப்பும் முறைப்படி இன்னும் திருமணம் முடிக்காதவர் களாய் இருந்தபோதிலும், சட்டப்படி மரியாள் யோசேப்புக்குக் கட்டுப்பட்டவராயிருந்தாள்.[31]

மரியாளிடத்தில் தூதன், "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக'' (வ. 31) என்று கூறினார். "இயேசு" என்பது, "யோசுவா" என்ற எபிரெயப் பெயருக்கு உரிய கிரேக்கப் பெயராக இருந்தது, இந்த எபிரெயப் பெயரானது, "யெகோவா இரட்சிக்கின்றார்" அல்லது "யெகோவா இரட்சிப்பாக இருக்கின்றார்" என்ற அர்த்தம் கொண்ட பெயரின் சுருக்க வடிவமாயிருக்கிறது. இது அந்த நாட்களில் மிகவும் சாதாரணப் பெயராக இருந்தது,[32] ஆனால் இது மரியாளின் குமாரனுக்கு இதன் ஏற்புடைய தன்மையினால் தேர்ந்து கொள்ளப்பட்டது (மத். 1:21ஐக் காணவும்).

நடக்கவிருந்தது பற்றித் தூதன் வாக்களித்ததை நம்புவதில், சகரியா வைப் போலின்றி, மரியாளுக்குச் சிரமம் எதுவும் இருக்கவில்லை (லூக். 1:45). [ஆயினும்] இது *எவ்வாறு* நடக்கும் என்பது பற்றி மரியாளுக்கு ஒரு கேள்வி இருந்தது:

> அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: ''இது எப்படியாகும்? புருஷனை அறியேனே''[33] என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதி யுத்தரமாக: "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (வ. 34, 35).

கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்ற வேதாகம உபதேசமானது முழுமையாகப் புரிந்துகொள்ளுதலுக்கான நமது திறனுக்கு அப்பால் உள்ளது, ஆனாலும் அதை நாம் விசுவாசத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றோம். கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை ஒருவர் ஏற்றுக் கொள்கின் றாரா அல்லவா என்பது முக்கியமற்றது என்று சிலர் போதிக்கின்றார்கள்.

*இந்த போதனையானது நமது விசுவாசத்திற்கு இன்றியமையாததாக இருப்பது ஏன் என்பதற்கு, ஜான் பிராங்க்ளின் கார்ட்டெர் அவர்கள் சில காரணங்களைப் பட்டியலிட்டார்:*[34]

*(1) இயேசு கன்னிப் பெண்ணிடமிருந்து பிறந்தார் என்று புதிய ஏற்பாடு போதிப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்த லானது வேத வாக்கியங்களின் ஏவுதலை மறுத்தல் என்பதை உள்ளடக் குகிறது.*

*(2) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது "தேவன் மாம்ச மாகுதல்" என்பதில் இன்றியமையாத பாகமாக இருப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது இயேசுவின் இன்றியமையாத தெய்வீகத்துவத்தை அழித்தல் என்பதாகிறது.*

*(3) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது இயேசு[வின்] தேவனாயிருத்தல் என்ற கருத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது இயேசுவின் மரணத்தினுடைய பலாபலன்களை மறுதலிக்கிறது. அழியக் கூடிய ஒருவரின் மரணம் அழியக் கூடிய மற்ற எல்லாருக்கும் ஒப்புரவாக்குதலை எவ்வாறு அளிக்க முடியும்?*

*(4) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது இயேசுவின் வாழ்வில் நடந்த அற்புதங்களில் முதலாவதாக இருந்தது என்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது ஒருவர் - உயிர்த்தெழுதல் உட்பட - மற்ற அற்புதங்களை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையைத் தரவழைக்கிறது. அவிசுவாசம் என்பது கன்னிப் பெண்ணிட மிருந்து பிறத்தல் என்பதை மறுப்பதன் வேராகவும் கனியாகவும் உள்ளது.*

## ***துதி ஏற்கப்பட்டது (லூக். 1:39-56)***[35]

*மரியாளின் உறவினளான எலிசபெத்தையும் தேவன் சந்தித்தார் என்றும் அந்த உறவுப் பெண்ணும் கர்ப்பமாயிருந்தார் என்றும் காபிரியேல் குறிப்பிட்டார். தூதனுடைய தரிசனத்திற்குச் சற்றுப் பின்பு, மரியாள், சகரியாவும் எலிசபெத்தும் வாழ்ந்த நகரத்திற்கு, தெற்கு முகமாக எழுபது அல்லது எண்பது மைல்கள் பயணம் சென்றார் (வ. 39, 40). ஒருவேளை இந்தப் பெண்மணி, தமக்கு நடந்ததைப் புரிந்து கொண்டு தம்மைப் பாராட்டக் கூடிய ஒரே நபர் தமது அவ்வுறவினள்தான் என்று நினைத் திருக்கலாம்.*

### ***எலிசபெத்து மரியாளை வாழ்த்தினாள் (வ. 1:41-45)***

*அது என்ன ஒரு இணைவாக இருந்திருக்க வேண்டும் - இரு பெண்கள், ஒருவர் முதிர்வயதுப் பெண் மற்றும் இன்னொருவர் இன்னமும் இளம்பெண், இவ்விருவரும் தேவனுடைய கரத்தினால் தொடப்பட்டிருந் தார்கள்! எலிசபெத்து மரியாளைக் கண்டபோது, அவள் மரியாளை வாழ்த்தும்படியான ஏவுதலினால் நிறைந்தாள்: "உரத்த சத்தமாய்: 'ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது' ... என்றாள்" (வ. 42).*

***மரியாள் தேவனைத் துதித்தாள் (வ. 1:46-56)***

*மரியாள் கர்த்தரைத் துதித்தலுடன் பதில்கொடுத்தாள். இவள் கடந்த காலத்தில் தேவன் செய்திருந்த மாபெரும் செயல்களைப் பற்றிப் பேசி, எதிர்காலத்தில் தேவன் மாபெரும் செயல்களைச் செய்வார் என்று எதிர்பார்ப்பைத் தெரிவித்தாள்.[36]*

*மரியாள் யூதேயாவில் - எலிசபெத்தின் கர்ப்ப காலம் முடிவுபெறும் வரையில் - மூன்று மாதங்களாகத் தங்கியிருந்தாள். பின்பு இவள் நாசரேத் ஊரில் இருந்த தமது இல்லத்திற்குத் திரும்பினாள்.[37]*

## *ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டார் (லூக். 1:57-80)*

***யோவானின் பிறப்பு (வ. 57-79)***

*சகரியா, எலிசபெத்து ஆகியோரின் மகன் பிறந்தபோது, அவர்களுடன் அகம் மகிழ அயலகத்தாரும் உறவினர்களும் ஒன்றுகூடினார்கள்.*

*யூதப் பிரமாணத்தின்படி, ஆண் குழந்தைகள் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டியிருந்தது (லேவி. 12:3). [இந்தப்] புதிய குழந்தையின் விருத்தசேதனத்தின்போது, குடும்பத்தார் இந்தப் பையனுக்கு இவனது தந்தையின் பெயரின்படி "சகரியா" என்று பெயர் சூட்டும்படி ஆலோசனை தெரிவித்தார்கள்,[38] ஆனால் எலிசபெத் (இவளுக்கு தூதனுடைய வார்த்தைகள் கூறப்பட்டிருக்கும் என்பது தெளிவு), "அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும்" என்று கூறினாள் (வ. 60). அவர்கள் சகரியாவிடம் கேட்டார்கள், ஆனால் அவரும் எலிசபெத்தின் பெயர்த் தேர்வை உறுதிப்படுத்தினார். "உடனே, அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்" (வ. 64).*

*வசனம் 68 முதல் 79 முடிய உள்ள பகுதியானது வயது முதிர்ந்த ஆசாரியரின் ஏவுதல் பெற்ற வார்த்தைகளைத் தருகிறது. வசனம் 68 முதல் 75 வரையுள்ள பகுதிகள் தேவன் தமது மக்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்திற்காக அவரைத் துதித்தலாயிருக்கையில், வசனம் 76 முதல் 79 வரையுள்ள பகுதிகள் அவரது மகனை நோக்கித் திருப்பப்பட்டவைகளாக உள்ளன. அவர் குழந்தையாயிருந்த யோவானிடம், "நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும் ... அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" (வ. 76, 77) என்று கூறினார். தூதனைப் போலவே, சகரியாவும் மேசியாவின் முன்னோடியானவரின் வருகையைப் பற்றி மல்கியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார்.*

***யோவானின் தொடக்க கால வாழ்வு (வ. 80)***

*யோவானின் வாழ்க்கையினுடைய முதல் முப்பது அல்லது அதற்குச்*

*சற்றேக் குறையச் சரியான ஆண்டுகளில் அவரது வாழ்வு பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பை வசனம் 80தருகிறது: "அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்." இந்த வனாந்தரப் பகுதியானது சவக்கடலின் மேற்கில் இருந்து மக்கள் பரவலாகக் குடியிருந்த யூதேயாவின் பகுதியாயிருந்தது.*

## *முடிவுரை*

*தூதர்கள் மனிதர்களுக்குத் தரிசனமாயிருந்தார்கள். மக்கள் பேசுவதற்குத் தேவனுடைய ஆவியால் ஏவுதல் பெற்றிருந்தார்கள். நானூறு ஆண்டுகளின் அமைதி[39] முறிக்கப்பட்டிருந்தது! "காலத்தின் நிறைவேற்றம்" (கலா. 4:4) வந்திருந்தது! கிறிஸ்து வந்து கொண்டிருந்தார்!*

*மேசியாவின் பிறப்பை எதிர்நோக்கியிருந்தவர்களின் உணர்வெழுச்சியைக் கவனியுங்கள். அவர்கள் இயேசு வருகின்றார் என்ற செய்தியினால் அகம் மகிழ்ந்தார்கள். "அவர் வந்துள்ளார் - அவர் வாழ்கின்றார்" என்று நீங்கள் கூறுகையில் அதே மெய்சிலிர்ப்பை நீங்கள் பெறுகின்றீர்களா? இந்த வரலாற்றை நன்கு அறிந்திருத்தல் என்பது உங்கள் சிந்தனையில் இதன் செயல்விளைவை மங்கலாக்க அனுமதிக்காதீர்கள்.*

*நமது அடுத்த பாடமானது இயேசுவின் பிறப்பை மையங் கொண்டதாயிருக்கும்.*

---

*குறிப்புகள்*

*[1]மரியாள் [எலிசபெத்தைச்] சந்திக்கச் சென்றது மற்றும் யோவானின் பிறப்பு ஆகியவற்றிற்கு இடையில் யோசேப்புக்குத் (மத். 1:18-25) தூதனின் அறிவிப்பு செருகப்பட முடியும். லூக்கா 1ல் தரப்பட்டுள்ளபடி வரலாற்றைத் தொடருவதில் ஒரு சில அனுகூலங்கள் உள்ளன. ஒப்பீட்டின் அடுத்த பகுதியை நாம் மத்தேயு 1:18ஐக் கொண்டு தொடங்குவோம். [2]"இந்த புத்தகத்தின் முன்பகுதியில்" லூக்கா 1:1-4ஐப் பற்றிய சுருக்கமான விளக்கங்கள் காணப்படுகின்றன. [3]யோவானுடைய தனிச்சிறப்பான அறிமுகத்திற்கான காரணம், இந்தப் புத்தகத்தின் முன்பகுதியில் கலைந்துரையாடப்பட்டுள்ளது. [4]சிருஷ்டிகர் என்ற வகையில் இயேசுவைப் பற்றி யோவான் 1:10; 1 கொரிந்தியர் 8:6; கொலோ. 1:16, 17; எபிரெயர் 1:2 ஆகிய வசனங்களில் காணவும். [5]பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்ற ''கர்த்தருடைய தூதன்'' என்பவரைச் சிலர் இயேசு என்று அடையாளப்படுத்தியுள்ளார்கள் (ஆதி. 16:7). எப்போதும் ஒரே தூதரே வந்தாரா அல்லவா என்பது தெளிவாய்த் தெரிவது இல்லை. அப்படியே ஒரே தூதனே வந்ததாகக் கொண்டாலும், இந்த இயற்கைக்கு மேலான ஜீவி, "தேவத்துவத்தின்" இரண்டாம் நபர் என்பதற்குத் தெளிவான ஆதாரம் எதுவும் இல்லை. [6]Logos என்பது யோவான் 1:1, 14ல் ''வார்த்தை'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல்லாக உள்ளது. இதில் இருந்துதான் நாம் "logic" என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இது "படித்தல்" என்று அர்த்தப்படுகின்ற "biology" (உயிர்களைப் பற்றிய படிப்பு) என்ற கூட்டு வார்த்தையில் உள்ளது போன்றும் பயன்படுத்தப்*

*படுகிறது. அப்போஸ்தலரான யோவான் இயேசுவைக் குறிப்பதற்கு logos என்ற வார்த்தையைப் பிற எழுத்தாக்கங்களிலும் பயன்படுத்தினார் (1 யோவான் 1:1; வெளி. 1:2; 19:13 ஆகியவற்றில் காணவும்). புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் இவர் ஒருவர் மட்டுமே கிறிஸ்துவைக் குறிக்க இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார்.* [7]*"மாம்சப் பிரகாரமான"* ["fleshly"] *என்பதை அர்த்தப்படுத்துவதற்கு* KJV*யானது அடிக்கடி* "carnal" *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது (ரோமர் 7:14).* [8]*யோவான் 3:19-21ஐயும் காணவும்.* [9]*ஆவிக்குரிய பிறப்பு என்பதன் கருத்து யோவான் 3ல் விரிவாக்கப்பட்டுள்ளது.* [10]Ken Gire, *Moments with the Savior* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998), 18.

[11]*மத்தேயுவின் பட்டியல் பழைய ஏற்பாட்டின் வம்ச வரலாற்றுடன் ஒப்பிடப் படும்போது, பல பெயர்கள் விட்டுவிடப்பட்டுள்ளதென்று காணப்படும். எடுத்துக் காட்டாக, மத்தேயு 1:8, "யோராம் உசியாவைப் பெற்றான்" என்று கூறுகிறது, ஆனால் உண்மையில் உசியா, யோராமின் கொள்ளுப் பேரனாயிருந்தார் (2 இரா. 8:25; 13:1; 14:1, 21 ஆகியவற்றைக் காணவும்). குறிப்பிட்ட இந்தத் தனிநபர்கள் ஏன் குறிப்பிடப்படாமல் உள்ளார்கள் என்று நாம் அறிவதில்லை. இவர்கள் துன்மார்க்கர் களாய் இருந்தார்கள், ஆனால் பட்டியலிடப்பட்டுள்ளவர்களில் சிலரும் அதே போன்றுதான் இருந்தார்கள். பின்வரும் இரண்டு உண்மைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்: (1) யூதர்கள் ஒரு வம்ச வழியில் வரும் அனைவரையும் பட்டியல் இடுவதில் அல்ல, ஆனால் அந்த வம்ச வழியைக் காண்பித்தல் பற்றியே அக்கறை கொண்டிருந்தார்கள். (2) யூதர்கள் "நேர்த்தியான" பட்டியல்களை விரும்பினார்கள்.* [12]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1353. [13]Gire, 19. [14]*இவ்விரு பட்டியல்களிலும் உள்ள செருபாபேல்கள் ஒரே மனிதரல்ல என்று சிலர் நம்பினாலும், இது செருபாபேலாக இருக்கலாம் என்ற ஒரு விதிவிலக்கு உள்ளது (மத். 1:12; லூக். 3:27).* [15]*இயேசு, யோசேப்பின் சட்டப்பூர்வமான மகனாயிருந்தார், ஆனால் அவருக்கு மாம்சப்படியான மகனாக இருக்கவில்லை. தேவன் மட்டுமே இயேசுவின் ஒரே தந்தையாக இருந்தார்.* [16]*இயேசுவின் வம்ச வழியைக் கண்ணோக்கும் இவ்விரு வழிமுறைகளும் சில வேளைகளில் (யோசேப்பின் மூலமான) சட்டப்பூர்வமான வம்ச வழியென்றும் (மரியாளின் மூலமான) அரசத்துவ (இராஜரீக) வம்ச வழி என்றும் வித்தியாசப் படுத்தப்படுகின்றன.* [17]*Ecclesiastical History* 1.7. [18]*இதற்கு முன்புள்ள பாடங்களான "மத்தேயு எழுதின சுவிசேஷம்" மற்றும் "மாற்கு எழுதின சுவிசேஷம்" என்ற பாடங்களில் இவர்களின் புத்தகங்கள் பற்றிய வலியுறுத்தங்களைக் காணவும்.* [19]*யூதர்கள் சட்டப்படி பெண்களை வம்ச வழியில் உள்ளடக்கியதில்லை என்பது இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். பெண்கள் தற்செயலாகவே குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும் (மத்.1:3, 5), ஆனால் சந்ததிகளின் வம்ச வழிகள் ஆண்கள் மூலமானவைகளாகவே இருந்தன.* [20]*சில மொழிபெயர்ப்புகளில் "ஏலி"* (Eli) *என்றிருக்கையில், மற்றவற்றில் "ஹேலி"* (Heli) *என்றுள்ளது. இது ஒரே பெயரை வெவ்வேறு எழுத்துக்களில் உச்சரிக்கும் வழிமுறைகளாக உள்ளன.*

[21]A.T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 261. *"குமாரன்" என்பது "[குறிப்பிட்ட அந்த நபரின்] வழித்தோன்றலானவர்" என்று சுட்டிக்காண்பிக்கக் கூடும் (மத். 1:1ஐக் காணவும்). வேதாகமத்தில் "குமாரன்" என்பது "மருமகன்" என்று குறிப்பிடுவதாக இருப்பதும் இன்னொரு சாத்தியக்கூறான அர்த்தமாக உள்ளது. சிலர், ஏலி மகள்களை மட்டுமே பெற்றிருந்தார், எனவே அவரது மருமகன்களில் ஒருவர் மகனுக்குரிய சுதந்தரத்தைப் பெற்றிருப்பார் என்று யூகிக்கின்றார்கள் (எண். 27:1-11; 36:1-13ஐக் காணவும்).*

[22]இப்புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் வம்சவழியை காணவும். முன்பு ஒரு குறிப்பில் சுட்டிக்காட்டியபடி, பட்டியல்களில் பெயரிடப்பட்ட செருபாபேல்கள் அதே மனிதனுயிருந்திருக்கக்கூடும் அல்லது இல்லாதிருக்கக்கூடும். [23]மோசேயின் அறிவுறுத்துதல்களின்படி, ஒருவர் ஆசாரியராக இருப்பதற்கு, அவர் தொடக்கப் பிரதான ஆசாரியரான ஆரோனின் சந்ததியில் வந்தவராக இருக்க வேண்டும் (யாத். 28:1). [24]வேதாகமத்தில் காபிரியேல் (லூக். 1:19, 26; தானி. 8:16; 9:21 ஆகிய வசனங்களைக் காணவும்) மற்றும் மிகாவேல் (யூதா 9; வெளி. 12:7; தானி 10:13, 21; 12:1 ஆகிய வசனங்களைக் காணவும்) என்ற இரண்டு தூதர்கள் மாத்திரமே பெயரினால் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். [25]"Angel" என்பது, "செய்தியாளர்" என்ற நேரடியான அர்த்தத்தைத் தருகிற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது [தமிழில் இது ''தூதன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. [26]காபிரியேல் தமது அறிவிப்பில், யோவான் "திராட்ச ரசமும் மதுவும் குடியான்" (லூக். 1:15) என்று குறிப்பிட்டார். இதை எண். 6:2, 3உடன் ஒப்பிடவும். யோவான் பிறப்பிலிருந்தே நசரேயராக இருந்திருப்பார் என்பது உறுதி. பிறப்பிலிருந்தே நசரேயர்களாக இருந்த மற்றவர்கள் சிம்சோன் (நியா. 13:3-7) மற்றும் சாமுவேல் (1 சாமு. 1:11) ஆகியோராவார்கள். [27]காபிரியேல், முன்னோடுபவர் குறித்த தீர்க்கதரிசனமான மல்கியா 4:5, 6லிருந்து மேற்கோள் காண்பித்தார். [28]காபிரியேல் மரியாளிடம் அறிவித்த சற்றுப் பின்பு அப்பெண்மணி கர்ப்பம் ஆனார் என்று யூகித்துக் கொண்டால், இது யோவான் ஸ்நானனை இயேசுவைவிட ஆறுமாதங்கள் மூத்தவராக்கும். [29]முதல் நூற்றாண்டின் யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் என்பவர் கலிலேயாவில் இருந்த 204 நகரங்கள் மற்றும் சிறு நகரங்கள் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால் அவர் அதில் நாசரேத்தூர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 14). தல்மூத் என்ற யூதர்களின் புத்தகத்தில் கலிலேயாவில் இருந்த அறுபத்து மூன்று நகரங்கள் பட்டியலிடப்பட்டன, அதில் நாசரேத்தூர் இல்லை. [30]சட்டப்படி, நியமித்தல் [பரிசம்போடுதல்] வைபவம் நடந்து ஒரு ஆண்டு சென்ற பின்புதான் திருமண வைபவம் நடைபெற்றது.

[31]உபாகமம் 22:23, 24ஐ வாசிக்கவும். இது மரியாள் கர்ப்பமாயிருந்ததை யோசேப்பு அறிந்தபோது அவரது இக்கட்டான நிலையை விவரிக்கிறது (மத். 1:18, 19). [32]அப். 13:6ஐ வாசிக்கவும். ("பர்யேசு" என்றால் "இயேசுவின் மகன்" என்று அர்த்தப்படுகிறது.) ''இயேசு'' என்பது சில கலாச்சாரங்களில் இன்னமும் ஒரு பொதுவான பெயராக உள்ளது. (ஹிஸ்பானிக் இனத்தைச் சேர்ந்த "இயேசு" என்ற பெயருடைய ஒருவர் ஒருமுறை என் அயலகத்தாராயிருந்தார்.) (தமிழகத்தில் இயேசு ராஜ், சேசுமேரி, இயேசய்யன் முதலிய பெயர்கள் பொதுவாக வழங்கப்படுகின்றன). [32]"கன்னி" என்பதற்குரிய வழக்கமான கிரேக்கச் சொல் (parthenos) என்பது லூக்கா 1:27ல் பயன்படுத்தப்பட்டது. வசனம் 34ல் மரியாள் "நான் புருஷனை அறியேனே" என்றுதான் கூறினாள் [தமிழில் இவ்வாறுதான் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது] (KJVயில் காணவும்). வசனப்பகுதியானது, தூதன் மரியாளுக்குத் தோன்றிய வேளையில் மரியாள் கன்னியாக இருந்ததை ஐயத்திற்கு இடமின்றி எடுத்துரைக்கிறது. [34]பின்தொடரும் காரணங்கள், John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 41-42 என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளன. [35]இந்த வசனப்பகுதி பற்றிய கூடுதல் உட்கண்ணோட்டத்திற்கு, அடுத்து வரும் பிரசங்கமான, "தேவன் மரியாளைத் தேர்ந்து கொண்டது ஏன்" என்பதில் காணவும். [36]மரியாளின் வார்த்தைகள் சில வேளைகளில், இவளது பாடலில் கர்த்தரை மேன்மைப்படுத்துகிற முதல்

*வார்த்தையான* Magnificat *என்பதைக் கொண்டு லத்தீன் மொழியில் அழைக்கப்படுகின்றன.* [37]*யோவான் பிறப்பதற்குச் சற்று முன்னதாக இவள்* [*மரியாள்*] *அவ்விடம் விட்டுப் புறப்பட்டாள் என்பது உறுதி. அந்தக் குழந்தை பிறந்தால் அதைப் பார்க்க வரும் எலிசபெத்தின் உறவினர்கள், தனது கர்ப்பம் பற்றி கேள்விகள் கேட்டு அதற்கு தான் பதில் அளிக்க இவள் விரும்பாது இருந்திருக்கலாம். (அவர்கள் மரியாளின் உறவினர்களாகவும் இருந்திருக்கலாம்.)* [38]*அந்த நாட்களில், ஆண் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்விக்கப்படும் தினத்தில் பெயர் சூட்டுவது வழக்கமாக இருந்தது (லூக். 2:21ஐக் காணவும்).* [39]*யோவானுடைய தொடக்க கால வாழ்வு பற்றிய ஒரு சில சிந்தனைகளுக்கு "எடுத்துரைப்புப் பிரசங்கித்தல்" என்ற இன்றைக்கான சத்தியத்தின் வெளியீட்டில் "இயேசு ஞானஸ்நானப்படுத்தப்பட்ட நாள்" என்ற பாடத்தில் காணவும்.*